ISSN 2454-3993

3.085 IMPACT FACTOR
JOURNAL WITH
SIJ TAMIL STUDIES

மலர் 3 ▪ சிறப்பிதழ் 2 ▪ பிப்ரவரி, 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

## மெடோனா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

விரகனூர், மதுரை

## சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

மதுரை

இணைந்து நடத்தும்

தொகுதி – 2

பன்னாட்டுக் கருத்தரங்கம்




08.02.2019

**பதிப்பாசிரியர்கள்**

திருமதி. சே.சலோமி இராஜர்கம்
அருள்சகோதரி முனைவர் திரவிய ரெஜினா ராஜம்
முனைவர் அ.செபாஸ்டின் மகிமைராஜ்
முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி
முனைவர் இரா.ஏஞ்சல்
முனைவர் கோ.கருணாகரன்
முனைவர் செ.அன்புராணி
திருமதி. ஜோ.சகாய பவுலின்

UGC Approved Journal Number: 40729
VOLUME 3 | SPECIAL ISSUE 2 | FEBRUARY 2019

**Shanlax International Journal of Tamil Studies**

A Peer-Reviewed-Refereed Scholarly Quarterly Journal Globally Indexed with Impact Factor

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX INTERNATIONAL JOURNALS

# சமுதாயத்தில் பெண்களின் பன்முகத்தன்மைகளும் மேம்பாடுகளும்

(பன்னாட்டுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | திருமதி.சே.சலோமி இராஜரீகம்<br>முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி<br>முனைவர் அ.செபாஸ்டின் மகிமை ராஜ்<br>முனைவர் இரா.ஏஞ்சல்<br>முனைவர் கோ.கருணாகரன்<br>முனைவர் செ.அன்புராணி<br>திருமதி ஜோ.சகாய பவுலின் |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | பிப்ரவரி, 2019 |
| வெளியீடு | : | மெடோனா பெண்கள் கலை மற்றும்<br>அறிவியல் கல்லூரி<br>விரகனூர், மதுரை - 625 009. |
| கணினி அச்சாக்கம் | : | சான்லாக்ஸ் பிரஸ் |
| பக்கங்கள் | : | 179 |

**ISSN : 2454 - 3993 (UGC Approval Number: 40729)**

பன்னாட்டுக் கருத்தரங்கம் **சமுதாயத்தில் பெண்களின் பன்முகத்தன்மைகளும் மேம்பாடுகளும்**

# இந்திய சுதந்திரத்தில் பெண்களின் பங்கு

ம.ஜெயலெட்சுமி
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தாமரைப்பாடி

மலர்: 3
சிறப்பிதழ்: 2
மாதம்: பிப்ரவரி
வருடம்: 2019
ISSN: 2454-3993

பெண்ணின் பெருமையே இம்மண்ணின் பெருமை என்பதை நிருபித்துக்காட்டியவர்கள் நம் பெண்கள் அடிமை அடிமை என்று கூறி அடிமையான பெண்ணும் இம்மண்ணை காக்க அடியெடுத்து வைத்ததனால் தான் சுதந்திரம் என்ற காற்றை சுவாசிக்க முடிந்தது. ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்பது மறுக்க முடியாத உண்மை பெண் சக்தியின் மறு உருவம்.

### சுதந்திரத்திற்கு பாடுபட்ட பெண்கள்

சுதந்திரத்திற்கு பாடுபட்டவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்க பெண்கள்

1. வேலுநாச்சியார்
2. கடலூர் அஞ்சலையம்மாள்
3. தில்லையாடி வள்ளியம்மை
4. அம்புஜத்தம்மாள்
5. இராணி மங்கம்மாள்
6. கோவிந்தம்மாள்

போன்றோர் ஆவர்.

### வேலுநாச்சியார்

வீரமும் நுண்ணறிவும் ஒருங்கே அமையப் பெற்றவர். அவரே ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி. இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் செல்லமுத்து சேதுபதி – சக்கந்தி முத்தாத்தாள் இணையருக்குக் கி.பி.1730 ஆம் ஆண்டு ஒரே பெண் மகவாகத் தோன்றியவர் வேலுநாச்சியார். இவர் பெற்றோரால் ஆண்வாரிசைப் போன்றே வளர்க்கப்பட்டு ஆயுதப்பயிற்சி முதல் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதல் வேலுநாச்சியாரை மணந்து கொண்டார்.

ஆங்கிலேயர் 1772 ஆம் ஆண்டு சிவகங்கை சீமையின் மீது படையெடுத்தனர் ஆங்கிலேயர்க்கும் முத்துவடுகநாதருக்கும் இடையே போர் நடைபெற்றது. அப்போரில் மன்னர் முத்துவடுகநாதர் வீரமரணமடைந்தார். வேலுநாச்சியாருக்கு மைசூர் மன்னர் ஐதர் அலி 5000 படைவீரர்களை அளித்து உதவினார். மருது சகோதரர்களுடன் வீரர்படைக்கு
த் தலைமையேற்றுச் சென்ற வேலுநாச்சியார் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார். அப்போரில் கணவரைக் கொன்றவர்களை வென்று 1780 இல் சிவகங்கையை மீட்டார். இவ்வாறாக எத்தனை வீரத்தமிழச்சிகள் ஆங்கிலேயருக்கு எதிராக போராட்டத்தில் கலந்து கொண்டனர் என்பதை

சரித்திரம் காட்டும்.

**கடலூர் அஞ்சலையம்மாள்**

இவர் 1890 ஆம் ஆண்டு கடலூரில் உள்ள முதுநகரில் எளிமையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார். 1921 ஆம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கிய போதே அஞ்சலையம்மாளும் தமது பொது வாழ்க்கையைத் தொடங்கினார். இவர் வந்தே மாதரம் என்ற முழக்கத்தோடு அத்தனை சுதந்திரம் போராட்டக் களத்திலும் முதலில் நின்றார். சிப்பாய்க் கலகத்தில் மக்களைக் கொன்று குவித்த வெள்ளைக்காரன் நீலன் சிலை அகற்றும் போராட்டத்தில் கலந்து கொண்டு அஞ்சலையம்மாளும் அவரது ஒன்பதாவது வயது மகள் அம்மாக்கண்ணுவும் சிறை சென்றனர்.

காந்தியடிகளால் தென்னாட்டின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்டார். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்திலும் கலந்து கொண்டார். எத்தனை முறை சிறை சென்றாலும் மீண்டும் போராட்டங்களில் கலந்து கொண்டார். 1932 ஆம் ஆண்டு நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டதால் சிறை செல்லும்போது அஞ்சலையம்மாள் நிறைமாத கர்ப்பிணியாக இருந்தார். பெண்ணுக்கு வலி தாங்கும் ஆற்றலும் அதை நாட்டுக்காக அர்ப்பணிக்கும் ஆற்றலும் அதிகம் என்பதை நமக்கு உணர்த்திய தமிழச்சி கடலூர் அஞ்சலையம்மாள் ஆவார்.

**தில்லையாடி வள்ளியம்மை**

தமிழகத்தில் மயிலாடுதுறைக்குப் பக்கத்தில் உள்ள கிராமம் தில்லையாடி. தில்லையாடி வள்ளியம்மையின் முதாதையர்கள் தென்னாப்பிரிக்காவிற்கு பிழைப்புக்காகச் சென்றவர்கள். காந்தியடிகளால் ஈர்க்கப்பட்டவர் வள்ளியம்மை. தென்னாப்பிரிக்காவில் ஒரு சட்டம் பிறப்பிக்கப்படுகிறது.

இந்தியாவில் திருமணம் செய்து கொண்டு தென்னாப்பிரிக்கா வந்து வேலை செய்பவர்கள் திருமணம் செல்லாது என்றொரு சட்டம் இயற்றப்படுகிறது. இதை எதிர்த்து காந்தியடிகள் தலைமையில் அங்கு போராட்டம் வெடிக்கிறது. காந்திஜி மனைவி கஸ்தூரிபா காந்தியும் இப்போராட்டத்தில் பங்கேற்றார் என்பதை அறிந்து தில்லையாடி வள்ளியம்மையும் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றார். சிறையில் உணவு சரியில்லாத காரணத்தினாலும் இரண்டு மாதம் கடுமையான சிறைவாசத்தாலும் வள்ளியம்மையின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. கடுமையான காய்ச்சல் வாட்டி வதைத்து இன்னும் சில நாட்களில் இறந்து விடுவாள் என்ற நிலையில் அவரை விடுதலை செய்து அனுப்பினார்கள். தில்லையாடி வள்ளியம்மையைப் பார்த்த காந்தியடிகள் மிகவும் வருந்தினார். சிறு வயதிலேயெ நாட்டுக்காக உயிரை விட்ட வீரத்தமிழச்சியும் பெண்தான்.

**அம்புஜத்தம்மாள்**

1899 ஆம் ஆண்டு வசதியான குடும்பத்தில் பிறந்தார். அன்னை கஸ்தூரிபாயின் எளிமையான வாழ்க்கையால் ஈர்க்கப்பட்டு இவரும் எளிமையாக வாழ்ந்தார். பிற்போக்கு சிந்தனைகளுடைய குடும்பச் சூழலிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார். வை.மு.கோதைநாயகி, ருக்குமணி, லட்சுமிபதி ஆகியோருடன் இணைந்து பெண்ணடிமைக்கு எதிராகப் போராடினார்.

பாரதியாரின் பாடல்களைப் பாடி மக்களிடையே விடுதலையுணர்வைத் தூண்டினார். ஆங்கிலேய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக அந்நியத் துணிகள் விற்கும் கடைக்கு முன்பாக மறியல் போராட்டம் நிகழ்த்தியதனால் வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில், தான் கற்ற மொழிகளைப் பிறருக்குக் கற்றுக் கொடுத்தார். காந்தியடிகளால் 'தத்தெடுக்கப்பட்ட மகள்' என்ற செல்லப்பெயர் பெற்றார். இத்தகைய பெருமை மிக்க அம்புஜத்தம்மாள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்நாட்டுப் பெண் ஆவார் என்பதை கூறும்போது இவர்களால் பெண்மை உயர்வடைந்தது புலப்படுகிறது.

**இராணி மங்கம்மாள்**

பெண்கள் முடிசூட்டி ஆட்சி செய்யாத நாயக்கர் மரபில் காப்பாட்சியாளராக இருந்து மதுரையை 1689 முதல் 1704 வரை ஆண்ட பெண்மணி ஆவார். மதுரையை ஆண்ட சொக்கநாத நாயக்கரின்

மனைவி ஆவார். கணவர் இறந்ததும் தன் மகன் அரங்க கிருஷ்ண முத்து வீரப்ப நாயக்கர் இளம் வயதினனாக இருந்த காரணத்தால் மகனுக்குத் துணையாகக் காப்பாட்சியாளராக இருந்து மதுரையை ஆண்டவர். திறமையான ஆட்சியாளர் சமயப் பொறை மிக்கவர். எதிர்ப்புகளைத் தன் ஆற்றலாலும் அறிவு நுட்பத்தாலும் முறியடித்தவர். 18 ஆண்டு காலம் தென்னாட்டை தனியே ஆண்ட பெண்ணரசி. இவருடைய ஆட்சி காலத்தில் மதுரை நாயக்கர்களின் தலைநகரமாக திருச்சிராப்பள்ளி விளங்கியது.

**கோவிந்தம்மாள்**

தமிழக மகளிர் தமிழகத்தில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் சென்று இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிய நிகழ்ச்சிகளும் உண்டு. அவர்களுள் குறிப்பிடத்தக்கவர். குடும்பத்தோடு மலேசியாவிற்குச் சென்ற வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கோவிந்தம்மாள் என்ற வீராங்கனை. இவர் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் இந்திய இராணுவத்தில் சேர்ந்து இந்திய விடுதலைக்காக அரும்பாடுபட்டவர். இந்திய சுதந்திரத்திற்காக தன் ராணுவத்திற்கு நிதி கொடுங்கள் என்று நேதாஜி கூறியதைக் கேட்டு உணர்ச்சி வசப்பட்டு இவர் தான் அணிந்திருந்த ஆறு பவுன் வளையல்களைக் கழற்றிக் கொடுத்தார். மீண்டும் நேதாஜி பாரத நாட்டுக்காக அணி திரளுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தவுடன் தனக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் ரப்பர் தோட்டத்தை இந்திய தேசிய ராணுவத்திற்கு நன்கொடையாகக் கொடுத்ததோடு மட்டுமின்றி மகளிருக்கென்று அமைந்த 'ஜான்சிராணி ரெஜிமெண்ட்'டில் சிப்பாயாகச் சேர்ந்தார். 1000 பெண்கள் கொண்ட அப்படையில் முதலில் 100 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பலரகத் துப்பாக்கிகளைச் சுடும் பயிற்சி தரப்பட்டது. அப்படி முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பேரில் கோவிந்தம்மாளும் ஒருவர். இவருடைய நேர்மையைப் பாராட்டி நேதாஜி இவருக்கு 'லாண்ட்ஸ் நாயக்' என்று பதவி உயர்வு அளித்தார். 1945 ஆம் ஆண்டு வரை இவர் அந்த இராணுவத்தில் பணியாற்றினார்.

**நிறைவாக**

ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த நம் நாட்டை காப்பாற்ற உயிர் தியாகம் செய்து உயர்வடைந்தனர் நம் பெண்கள். சமூகக் கட்டுப்பாடுகளையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு வீராவேசத்துடன் வெளிவந்து விடுதலைக்கு வித்திட்ட இவ்வீரமகளிர் வரலாறு தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று.